தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 08.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 18637/F/2023**

திரு.மு.தினேஷ் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
(தலைமையிடம்)
மாவட்ட காவல் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606202.

பொதுத்தகவல் அலுவலர் /
காவல் துறை துணைத் தலைவர்,
காவல்துறை துணைத் தலைவர் அலுவலகம்,
விழுப்புரம்-605602 .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 08.07.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.மு.தினேஷ் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திருமதி.S.புவனேஸ்வரி, நிர்வாக அலுவலர், மாவட்ட காவல் அலுவலகம், விழுப்புரம் i/c சரக அலுவலகம், விழுப்புரம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 21.08.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், காவல்துறை துணைத் தலைவர் விழுப்புரம் அவர்களுக்கு 23.03.2023 தேதியில் கடிதம் மூலம் புகார் அளித்ததாகவும் கடித எண்.RT 435180502 IN இந்த புகார் மனு மீது விசாரணை மேற்கொண்ட விசாரணை அலுவலரின் பெயர் மற்றும் அவருடைய

விசாரணை அறிக்கையின் நகல் என்பன போன்ற 5 இனங்களில் தகவல்களை கோரியுள்ளார்.

3. அதனைப்பெற்ற பொதுதகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை. மனுதாரர் தனக்கு தகவல் வழங்கவில்லை என தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 23.09.2023 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 25.10.2023 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (08.07.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவினை சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 23.08.2023 நாளிட்ட கடிதம் மூலம் உரிய பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்துள்ளார். அம்மனுவினை பெற்ற பொதுத்தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையிடம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் 13.09.2023 மற்றும் 02.07.2026 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல் வழங்கியுள்ளதாக கூறி ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு சரியான தகவலை பெற்றுத்தருமாறு கோரினார்.

5. இவ்வாணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஏற்புடையது அல்ல எனக்கருதி இவ்வாணையம் கீழ்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது.

- **“மனுதாரரின் 21.08.2023 தேதியிட்ட மனுவில் கோரியுள்ள இனம் 2 மற்றும் 3 ற்கு உரிய தகவல்களை ஆவணங்களை மீண்டும் தேடிப் பார்த்து, கிடைக்கப்பெறும்பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒருவார காலத்திற்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை 19.08.2026 அன்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், கள்ளக்குறிச்சி அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது”.**
- **“மேற்படி ஆவணங்கள் கிடைக்கப்பெறாதபட்சத்தில், அது குறித்துப் பிரமாண வாக்குப்பத்திரம் (Sworn Affidavit) ஒன்றை தயார் செய்து**

**மனுதாரருக்கு அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலினை 19.08.2026 அன்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது".**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 18637/F/2023**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
(தலைமையிடம்)
மாவட்ட காவல் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606202.

பொதுத்தகவல் அலுவலர் /
காவல் துறை துணைத் தலைவர்,
காவல்துறை துணைத் தலைவர்
அலுவலகம்,
விழுப்புரம்-605602

**மனுதாரர்**
திரு.மு.தினேஷ்,
18, சேணியர் வீதி,
மணலூர்பேட்டை போஸ்ட்,
திருக்கோவிலூர் தாலுகா,
கள்ளக்குறிச்சி-605754.

Copy to file: KR/PA